ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ மாணிக்கக்கிண்கிணி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாணிக்கக்கிண்கிணி ॥

## சப்பாணிப் பருவம்

‡மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப⋆ மருங்கின் மேல்⋆
ஆணிப் பொன்னால் செய்த⋆ ஆய்பொன் உடை மணி⋆
பேணிப் பவளவாய்⋆ முத்திலங்க⋆ பண்டு
காணி கொண்ட கைகளால் சப்பாணி⋆
கருங்குழல் குட்டனே! சப்பாணி (1)

பொன் அரைநாணொடு⋆ மாணிக்கக் கிண்கிணி⋆
தன் அரை ஆடத்⋆ தனிச் சுட்டி தாழ்ந்தாட⋆
என் அரை மேல் நின்றிழிந்து⋆ உங்கள் ஆயர்தம்⋆
மன்னரை மேல் கொட்டாய் சப்பாணி⋆
மாயவனே! கொட்டாய் சப்பாணி (2)

பன்மணி முத்து⋆ இன்பவளம் பதித்தன்ன⋆
என் மணிவண்ணன்!⋆ இலங்கு பொன் தேட்டின் மேல்⋆
நின் மணிவாய் முத்திலங்க⋆ நின் அம்மை தன்⋆
அம்மணி மேல் கொட்டாய் சப்பாணி⋆
ஆழியங்கையனே! சப்பாணி (3)

தூ நிலா முற்றத்தே⋆ போந்து விளையாட⋆
வானிலா அம்புலீ!⋆ சந்திரா! வா என்று⋆
நீ நிலா நின் புகழா⋆ நின்ற ஆயர்தம்⋆
கோ நிலாவக்கொட்டாய் சப்பாணி⋆
குடந்தைக் கிடந்தானே! சப்பாணி (4)

புட்டியில் சேறும்⋆ புழுதியும் கொண்டு வந்து⋆
அட்டி அமுக்கி⋆ அகம் புக்கறியாமே⋆
சட்டித் தயிரும்⋆ தடாவினில் வெண்ணெயும் உண்⋆
பட்டிக் கன்றே! கொட்டாய் சப்பாணி⋆
பற்பநாபா! கொட்டாய் சப்பாணி (5)

தாரித்து நூற்றுவர்⋆ தந்தை சொல் கொள்ளாது⋆
போர் உய்த்து வந்து⋆ புகுந்தவர் மண் ஆள⋆
பாரித்த மன்னர் படப்⋆ பஞ்சவர்க்கு⋆ அன்று
தேர் உய்த்த கைகளால் சப்பாணி⋆
தேவகி சிங்கமே! சப்பாணி (6)

பரந்திட்டு நின்ற⋆ படு கடல் தன்னை⋆
இரந்திட்ட கைம்மேல்⋆ எறிதிரை மோத⋆
கரந்திட்டு நின்ற⋆ கடலைக் கலங்க⋆
சரந்தொட்ட கைகளால் சப்பாணி⋆
சார்ங்கவிற்கையனே! சப்பாணி (7)

குரக்கினத்தாலே⋆ குரைகடல் தன்னை⋆
நெருக்கி அணை கட்டி⋆ நீள்நீர் இலங்கை⋆
அரக்கர் அவிய⋆ அடு கணையாலே⋆
நெருக்கிய கைகளால் சப்பாணி⋆
நேமியங்கையனே! சப்பாணி (8)

அளந்திட்ட தூணை⋆ அவன் தட்ட⋆ ஆங்கே
வளர்ந்திட்டு⋆ வாள் உகிர்ச் சிங்க உருவாய்⋆
உளந்தொட்டிரணியன்⋆ ஒண்மார்வகலம்⋆
பிளந்திட்ட கைகளால் சப்பாணி⋆
பேய் முலை உண்டானே! சப்பாணி (9)

அடைந்திட்டமரர்கள்⋆ ஆழ் கடல் தன்னை⋆
மிடைந்திட்டு மந்தரம்⋆ மத்தாக நாட்டி⋆
வடம் சுற்றி⋆ வாசுகி வன்கயிறாகக்⋆
கடைந்திட்ட கைகளால் சப்பாணி⋆
கார்முகில் வண்ணனே! சப்பாணி (10)

‡ஆட்கொள்ளத் தோன்றிய⋆ ஆயர்தம் கோவினை⋆
நாட்கமழ் பூம் பொழில்⋆ வில்லிபுத்தூர்ப் பட்டன்⋆
வேட்கையால் சொன்ன⋆ சப்பாணி ஈரைந்தும்⋆
வேட்கையினால் சொல்லுவார்⋆ வினை போமே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥